O.S.No.24/2019
Date 02.02.2021
பெயர்.சிலோன் மணி (DW-1)
11 முதல் 14 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை -

தாவா சொத்து திரவியம் மகன் பன்னீருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த 1957ம் வருடம் ஆப்பனூரில் கலகம் ஏற்பட்டதில் மேற்படி ஆவணங்கள் தீயில் எரிந்துவிட்டது. ஆவணங்கள் எதுவும் இல்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்திய அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ஆறுமுகத்தேவர் பெயரில் பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம், பட்டா எண், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கு நான்குமால் மேற்கில் ஜெயராஜ் நிலம், வடக்கு பக்கம் எனக்கும், ஆறுமுகத்தேவருக்கும் பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. தெற்கு பக்கம் கண்மாய், கிழக்கு பக்கம் யாருக்கு என்று தெரியாது. எந்த சர்வே எண் சொத்திற்கு பாத்தியமாடி வழக்காடிகிறீர்கள் என்றால் சர்வே எண்.271, 272 வழக்காடுகிறேன். நான் தாக்க செய்த எங்கள் பெயரில் வருவாய் ஆவணங்களில் அனைத்தும் தவறாக ஏற்பட்டதால் ரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாத்திய அனுபவம் இல்லை என்று சொன்னால் தவறு. தாவா சொத்தை 4ம் பிரதிவாதி வகையறா அனுபவித்து வந்தனர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு பகுதியை 4ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் தவறு.

(ஒப்பம்/-R.கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கடலாடி.